நடிகர்கள், அவர்கள் முன்னணிக்கு வரவொட்டாமல் முட்டுக் கட்டையாக இருப்பதைப்பற்றி அரசுக்கு ஏதாவது தகவல் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒருவருடைய முன்னேற்றத்தில் இன்னொருவர் முட்டுக்கட்டையாக இருப்பது கலைத் துறையில் மட்டுமல்ல ; அது எல்லாத் துறைகளிலும் இருக்கும் சகஜமான ஒன்றுதான்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Cinemas and cinema industries are expanding. May I know from the Hon. Chief Minister whether it comes under the Central List, Concurrent List or the State List?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் கேட்கப்பட்டிருக்கிற விவரம் இப்பொழுது மத்திய அரசினுடைய விவகாரத்தில்தான் இருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : நமது அரசு நடத்தும் நடிப்புக் கலைக் கல்லூரியில் தேர்ச்சி பெற்றவர்கள் நல்ல நடிகர்களாக வந்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட விவரங்கள் எதுவும் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

மதுரை நகருக்கு வானொலி நிலையம்

*** 296 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில் வானொலி நிலையம் அமைத்திட தமிழ்நாடு அரசு மத்திய அரசினை கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) மதுரை மாநகரில் வானொலி நிலையம் அமைக்க வேண்டிய அவசியத்தை தமிழக அரசு மத்திய அரசிடம் வலியுறுத்திக் கூறியது. அதற்கு நான்காவது திட்டக் காலத்தில் எல்லைப்புறம் போன்ற பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும், மலைப் பகுதி, பின்தங்கிய பகுதி மற்றும் இதுவரை வானொலியால் பயன் பெறாத பகுதி ஆகிய இடங்களில் வானொலி நிலையம் அமைக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி திட்டங்கள் தீட்டி ஏற்கனவே செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது. இதன் காரணமாகவும், நிதி வசதியின்மையாலும் புதிய திட்டங்கள் எதுவும் எடுத்துக்கொள்ள இயலவில்லை. எனினும் இனிமேல் மேற்கொள்ளப்படும் திட்டங்களின்போது மதுரை மாநகரின் தேவையையும் கருத்தில் கொள்ளப்படும் என்று மைய அரசு கூறியுள்ளது.

1971 டிசம்பர் 13]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மதுரை அண்மையில் மாநகராட்சியாக ஆகியுள்ளது. இது தமிழகத்தின் இரண்டாவது மாநகராட்சியாக உருவெடுத்துள்ளதால், இதனைச் சுட்டிக்காட்டியேனும் மதுரைக்கு அத்தகைய வானொலி நிலையத்தை அமைக்க அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மைய அரசுக்கு அடுத்து ஒரு கடிதம் எழுதும்போது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன இந்தப் புதிய கருத்தும் அதிலே சேர்க்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த அவசர காலத்திலே வடக்கே வேண்டுமென்றால் இப்பொழுது ரேடியோ ஸ்டேஷன் திறக்கக் கஷ்டம் இருந்தாலும்கூடத் தென்பிராந்தியத்திலே கொஞ்சம் வலுவான ஸ்டேஷன் அமைக்க வாய்ப்பிருக்கிறது. எனவே, அம்மாதிரி அமைக்கும் பெரிய ஸ்டேஷனை மதுரையில் அமைக்க, நான்காவது திட்டத்தில் ஆக்க மீண்டும் அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைத்தான் ஏற்கனவே சொன்னேன், அடிக்கடி, மதுரையில் வானொலி நிலையம் அமைப்பது சம்பந்தமாக, மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டே இருக்கும்.

*** 287 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் திட்டங்களை வானொலியில் பிரச்சாரம் செய்ய மத்திய அரசிடம் வானொலியில் தனியே நேரம் ஒதுக்கக் கோரி மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : "வளரும் தமிழகம்" என்ற தலைப்பில் திங்கள் இருமுறை முதல் ஞாயிறும், மூன்றாம் ஞாயிறும் தமிழக அரசால் மக்களின் நலனுக்காக நிறைவேற்றப் படும் பல்வேறு திட்ட ஆக்கப்பணிகளைப் பற்றி பொது மக்களுக்கு எடுத்துக்கூறும் நோக்கத்துடன், பல்வேறு துறைத் தலைவர்களும் வானொலி உரை நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட நாட்களில் மாலை 6.30 மணிக்கு இதற்காக சுமார் 10 முதல் 12 நிமிடங்கள் வரை வானொலி நிலையத்தார் ஒதுக்கி இருக்கின்றனர். இத் திட்டம் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக செயலில் இருந்து வருகிறது.

அரசு அலுவலகங்களில் வேலை நாட்கள்

*** 298 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலங்களில் வாரத்துக்கு ஐந்து தினங்கள் மட்டும் வேலை நாட்களாக்குவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?